

சிவகங்கை மாவட்ட இளைஞரணி அமைப்பாளராக புதிதாக நியமிக்கப்பட்ட நாகனி செந்தில்குமார் மற்றும் துணை அமைப்பாளர்கள் சிவகங்கை மாவட்டக் கழக செயலாளரும் கூட்டுறவுத்துறை அமைச்சருமான கேஆர்.பெரியகருப்பன், முன்னாள் அமைச்சர் மு.தென்னவன் ஆகியோரிடம் வாழ்த்துப் பெற்றார்கள்.

### தமிழ் மொழியை காப்பதில்

# வாழ்நாள் முழுவதும் இடிதாங்கியாக இருந்தவர் கலைஞர்!

## அமைச்சர் பெரியகருப்பன் பேச்சு!



சிவகங்கை. ஜூலை 11-

சிவகங்கை மாவட்டத்தில் தலைவர் கலைஞர் நூற்றாண்டு விழாவினை முன்னிட்டு பொதுக்கூட்டங்கள் நலத்திட்ட உதவிகள் ஒன்றிய, நகர, பேரூர் பகுதிகளில் நடைபெற்று வருகிறது. இதில் ஒரு பகுதியாக கல்லல் மேற்கு ஒன்றிய கழகத்தின் சார்பில் பட்டமங்கலத்தில் ஒன்றிய கழகச் செயலாளர் குன்னக்குடி சுப்பிரமணியன் தலைமையில் முன்னாள் அமைச்சர் மு.தென்னவன் முன்னிலையில் கலைஞர் நூற்றாண்டு பிறந்தநாள் பொதுக்கூட்டம் நடைபெற்றது. ஒன்றிய இளைஞரணி அமைப்பாளர் குன்னக்குடி குமார் வரவேற்றுப் பேசினார். இந்த கூட்டத்தில் மாவட்ட கழகச் செயலாளரும், கூட்டுறவுத்துறை அமைச்சருமான கேஆர்.பெரியகருப்பன் கலந்துகொண்டு பேசியதாவது:-

தலைவர் கலைஞர் அவர்கள் தனது வாழ்நாள் முழுவதும் தமிழக மக்கள் முன்னேற்றத்திற்காகவும் தமிழ்நாட்டின் வளர்ச்சிக்காகவும் அயராது பாடுபட்டார். தமிழுக்கு செம்மொழி அந்தஸ்தினை பெற்று தந்தார். பல வழிகளில் தமிழ் மொழியை அழிப்பதற்கான முயற்சிகள் நடைபெற்ற பொழுது அதை எதிர்த்து துணிச்சலான குரல் கொடுத்தவர் தலைவர் கலைஞர். தமிழ் மொழி காக்கும் இடிதாங்கியாக தலைவர் கலைஞர் அவர்கள் திகழ்ந்து வந்தார். ஐந்து முறை முதல்வராக இருந்த பொழுது தலைவர் கலைஞர் அவர்கள் பல்வேறு திட்டங்களை நிறைவேற்றினார் . அதில் குறிப்பாக பெண்களுக்கு சுய மகளிர் குழுவினை ஏற்படுத்தி பெண்களின் வாழ்க்கையில் பொருளாதார மறுமலர்ச்சியினை உண்டாக்கினார். அதனால் இன்று பெண்கள் தலை நிமிர்ந்து நிற்கிறார்கள். அதற்கு தலைவர் கலைஞர் அவர்கள் தான் காரணம். அவரது வழியில் நமது முதல்வர் தளபதி அவர்களும் ஆட்சியை நடத்தி வருகின்றார்.

பெண்களுக்கு ஏராளமான திட்டங்களை செயல்படுத்தி வருகின்றார். பேரறிஞர் அண்ணா அவர்கள் திராவிட முன்னேற்றக் கழகத்தை உருவாக்கிய பொழுது அவரது கொள்கைகள் லட்சியங்களை தலைவர் கலைஞர் அவர்கள் தனது வாழ்நாள் முழுவதும் நிறைவேற்றினார். அவரது வழியில் முதல்வர் தளபதி அவர்களும் கழகத்தையும் ஆட்சியையும் சிறப்பாக நடத்தி வருகிறார்.

இந்திய அளவில் தலைவர் கலைஞரின் அரசியல் செயல்பாட்டினைஅனைத்து அரசியல் தலைவர்களும் உற்று நோக்கி வரவேற்றார்கள். அதே வழியில் இன்று தமிழக முதல்வர் தளபதி அவர்களும் இந்திய அளவில் அரசியலில் மையமாக விளங்கி வருகிறார். அவர் எடுக்கும் முயற்சிகளுக்கு அனைவரும் ஆதரவு தர வேண்டும். இவ்வாறு அமைச்சர் பெரியகருப்பன் சிறப்புரையாற்றினார்.

இந்த பொதுக்கூட்டத்தில் 1400 மகளிர்களுக்கு நலத்திட்ட உதவிகளை அமைச்சர் பெரியகருப்பன் முன்னாள் அமைச்சர் மு.தென்னவன் ஆகியோர் வழங்கினார்கள்.

இந்த கூட்டத்தில் முனைவர் எழிலரசி, குடியாத்தம் தமிழரசி, மாவட்ட கழக துணை செயலாளர்கள் த.சேங்கை மாறன், கே.எஸ்.எம்.மணிமுத்து, மாநில மாணவர் அணி துணை அமைப்பாளர் திருமதி பூர்ண சங்கீதா ஆகியோர் சிறப்புரையாற்றினார்கள்.

இந்த பொதுக்கூட்டத்தில் பொதுக்குழு உறுப்பினர் பள்ளத்தூர் கே.எஸ். ரவி, தொழிலதிபர் மணிகண்டன், மாவட்ட மகளிரணி அமைப்பாளர் பவானி கணேசன், ஊராட்சி மன்ற தலைவர் பிரமிளா கார்த்திகேயன், மாவட்ட கவுன்சிலர் மஞ்சரி லட்சுமணன், இளைஞர் அணி துணை அமைப்பாளர் ராமராஜன், ஒன்றிய கவுன்சிலர் மருது பாண்டியன் இளைஞர் அணி ரவிச்சந்திரன், கிளைச் செயலாளர் பிரவீன் குமார் ஆகியோர் கலந்து கொண்டார்கள். கூட்டத்திற்கான ஏற்பாடுகளை கல்லல் மேற்கு ஒன்றிய செயலாளர் குன்னக்குடி சுப்பிரமணியன் தலைமையில் பட்டமங்கலம் ஊராட்சி கழக நிர்வாகிகள் செய்திருந்தார்கள்.

### சிலம்பம் போட்டியில் மாவட்ட அளவில்

# முதலிடம் பிடித்து தங்கப் பதக்கம் வென்ற மாணவிக்கு பாராட்டு

தேனி, ஜூலை 11-

ஆண்டிபட்டி அருகே அமைந்துள்ள அரசு தொழிற் பயிற்சி நிலையத்தை சேர்ந்த மாணவி முதல்வர் கோப்பைக்கான சிலம்பம் போட்டியில் மாவட்ட அளவில் முதலிடம் பிடித்து தங்கப்பதக்கம் வென்றதை தொழிற்பயிற்சி நிலைய முதல்வர் மற்றும் ஆசிரியர்கள் பாராட்டினார்கள்.

தமிழ்நாடு அரசின் உத்தரவுப்படி முதல்வர் கோப்பைக்கான மாவட்ட அளவிலான விளையாட்டுப் போட்டிகள் மாவட்ட விளையாட்டு அரங்கத்தில் நடைபெற்றது. இது மாவட்டத்தின் பல்வேறு பகுதியில் இருந்து ஏராளமான மாணவிகள் பல்வேறு போட்டிகளில் பங்கேற்று வெற்றி பெற்றனர். இந்தநிலையில், ஆண்டிபட்டி அருகே உள்ள அரசு தொழில் பயிற்சி நிலையத்தில் 6 தொழிற்பிரிவுகள் உள்ளது. கம்ப்யூட்டர் பயிற்சி, துணி வெட்டுதல் மற்றும் தையல் வேலை, ஸ்மார்ட்போன் டெக்னீசியன் மற்றும் ஆப் பரிசோதித்தல், தகவல் தொழில்நுட்பம், டெக்ஸ்டைல் இயந்திரவியல், குளிர்பதனம் மற்றும் தட்ப வெட்ப நிலை போன்ற பிரிவுகளில் சுமார் 250க்கும் மேற்பட்ட மாணவிகள் படித்து வருகின்றனர்.

இந்த தொழில் பயிற்சி நிலையத்தில் ஸ்மார்ட் போன் டெக்னீசியன் மற்றும் ஆப் பரிசோதித்தல் பிரிவில் படிக்கும் பரமேஸ்வரி என்ற மாணவி முதல்வர் கோப்பைக்கான சிலம்பம் போட்டியில் கலந்து கொண்டு மாவட்ட அளவில் முதலிடம் பிடித்து தங்கப்பதக்கம் வென்றுள்ளார். அதேபோல் சிலம்பம் ஒற்றை வால் வீச்சு போட்டியில் கலந்துகொண்டு வெண்கல பதக்கம் பெற்றுள்ளார்.

இந்த மாணவியை பாராட்டும் வகையில் அரசு தொழில் பயிற்சி நிலையம் முதல்வர் சரவணன் நினைவு பரிசு வழங்கி பாராட்டினார்.

மேலும் இதனை ஊக்குவித்த பயிற்றுநர் திலகம் என்பவரை பாராட்டினார். இதேபோல் வெற்றி பெற்ற மாணவியை அனைத்து ஆசிரியர்களும், பெற்றோர்கள் மற்றும் சக மாணவிகளும் பாராட்டினார்கள்.

### தஞ்சை தெற்கு மாவட்டம் முழுவதும்

# முத்தமிழறிஞர் கலைஞர் நூற்றாண்டு விழா பொதுக்கூட்டங்கள் - கருத்தரங்கங்கள்!

## மாவட்டக் கழகச் செயலாளர் கா.அண்ணாதுரை எம்.எல்.ஏ. அறிவிப்பு!



இந்திய அரசியல் வரலாற்றின் நாயகன், முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் நூற்றாண்டு பிறந்தநாள் விழாவை முன்னிட்டு தஞ்சை தெற்கு மாவட்டம் முழுவதும் கீழ்க்கண்டவாறு பொதுக்கூட்டங்கள், கருத்தரங்கங்கள் நடைபெற உள்ளன.

அதுசமயம் கீழ்க்கண்ட நிகழ்ச்சிகளில் நாடாளுமன்ற, சட்டமன்ற உறுப்பினர்கள், தலைமைக் கழக நிர்வாகிகள், மாவட்டக் கழக நிர்வாகிகள், தலைமைச் செயற்குழு,பொதுக்குழு உறுப்பினர்கள், நகர, ஒன்றிய, பேரூர், வட்டம், கிளைக் கழக நிர்வாகிகள், மாவட்ட சார்புஅணிகளின் நிர்வாகிகள், மாவட்டக் கழக பிரதிநிதிகள், கழக முன்னோடிகள், உள்ளாட்சி பிரதிநிதிகள் திரளாக கலந்து கொண்டு சிறப்பிக்க வேண்டுமாய் கேட்டுக்கொள்கிறேன்.

| நாள் | நிகழ்ச்சி | சிறப்புரை | நிகழ்ச்சி ஏற்பாடு |
|---|---|---|---|
| 14.07.2023 வெள்ளி | பொதுக் கூட்டம் | திருச்சி என்.சிவா எம்.பி கழக கொள்கைப் பரப்புச் செயலாளர் . | மதுக்கூர் ஒன்றியம் |
| 14.07.2023 வெள்ளி | பொதுக் கூட்டம் | பசும்பொன் ரவிசந்திரன் | சேதுபாவா சத்திரம் தெற்கு ஒன்றியம் |
| 15.07.2023 சனி | பொதுக் கூட்டம் | பசும்பொன் ரவிசந்திரன் | பட்டுக்கோட்டை மேற்கு ஒன்றியம் |
| 22.07.2023 சனி | பொதுக் கூட்டம் | ஆடுதுறை மு.உத்திராபதி கழக இலக்கிய அணி துணை செயலாளர் | பட்டுக்கோட்டை வடக்கு ஒன்றியம் |
| 23.07.2023 ஞாயிறு | பொதுக் கூட்டம் | ஆடுதுறை மு.உத்திராபதி கழக இலக்கிய அணி துணை செயலாளர் | பேராவூரணி வடக்கு ஒன்றியம் |
| 02.08.2023 புதன் | பொதுக் கூட்டம் | நாஞ்சில் சம்பத் | அதிராம்பட்டினம் நகரம் |
| 15.08.2023 செவ்வாய் | கருத்தரங்கம் | சுப.வீரபாண்டியன் திராவிட இயக்க தமிழர் பேரவை நிறுவனர் | தஞ்சை தெற்கு மாவட்டக் கழகம் |
| 20.08.2023 ஞாயிறு | பொதுக் கூட்டம் | ஆ.இராசா எம்.பி கழக துணை பொதுச் செயலாளர் | தஞ்சை தெற்கு மாவட்டக் கழகம் |
| 10.09.2023 ஞாயிறு | பொதுக் கூட்டம் | ஆ.இராசா எம்.பி கழக துணை பொதுச் செயலாளர் | திருவோணம் தெற்கு ஒன்றியம் |

**கா.அண்ணாதுரை எம்.எல்.ஏ.**
செயலாளர்
தஞ்சை தெற்கு மாவட்ட தி.மு.க.



மதுரையில் வரும் 15ஆம் தேதி கலைஞர் நூற்றாண்டு நூலகத்தை திறந்து வைக்க வருகை தரும் கழகத் தலைவர் – முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்களுக்கு வரலாறு காணாத வகையில் மாபெரும் வரவேற்பு கொடுப்பது குறித்த மதுரை வடக்கு மாவட்ட செயல்வீரர்கள் கூட்டத்தில் வடக்கு மாவட்ட செயலாளர் – வணிகவரி மற்றும் பதிவுத்துறை அமைச்சர் பி.மூர்த்தி சிறப்புரையாற்றினார். உடன் கழக நிர்வாகிகள் எம்.ஆர்.எம்.பாலசுப்பிரமணியன், ஆ.வெங்கடேசன் எம்.எல்.ஏ., சோமசுந்தர பாண்டியன், நேரு பாண்டியன், ஆசைக்கண்ணன், எ.சேகர், ரோகிணி பொம்ம தேவன் மற்றும் திரளான கழக நிர்வாகிகள், கழகத்தினர் கலந்து கொண்டனர்.

### ஆடி மாதத்தை முன்னிட்டு

# அம்மன் கோயில்களுக்கு குறைந்த கட்டணத்தில் ஆன்மிகச் சுற்றுலா!

## அமைச்சர் பி.கே.சேகர்பாபு தகவல்!



சென்னை, ஜூலை 11-

தமிழ்நாட்டில் மக்கள் தாய்தெய்வ வழிபாட்டை தொன்று தொட்டுப் போற்றி வருகின்றனர். பல்வேறு திருக்கோயில்களுக்கு ஒரே நாளில் சென்று வழிபடுவதை பெருவிருப்பமாகக் கொள்கின்றனர். இதனைக் கருத்தில் கொண்டு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களின் வழிகாட்டுதலின்படி, தமிழ்நாட்டிலுள்ள பிரசித்தி பெற்ற அம்மன் திருக்கோயில்களுக்கு கடந்த ஆண்டைப் போலவே சுற்றுலாத்துறையுடன் ஒருங்கிணைந்து எதிர்வரும் ஆடி மாதம் பக்தர்கள் ஆன்மிகச் சுற்றுலா அழைத்துச் செல்லப்படுவர் என இந்து சமய அறநிலையத்துறை அமைச்சர் பி.கே.சேகர்பாபு தெரிவித்துள்ளார்.

2022-2023ஆம் ஆண்டு சட்டமன்ற மானியக் கோரிக்கையில் “தமிழ்நாட்டில் உள்ள பிரசித்தி பெற்ற அம்மன் திருக்கோயில்களுக்கும், வைணவத் திருக்கோயில்களுக்கும் முக்கிய விழா நாட்களில் ஆன்மிகப் பயணம் செல்ல சுற்றுலாத்துறையுடன் ஒருங்கிணைந்து ஏற்பாடுகள் செய்யப்படும்” என அறிவிக்கப்பட்டது.

இந்த அறிவிப்பைச் செயல்படுத்தும் விதமாக கடந்த ஆண்டு ஆடி மாதம் சென்னை, திருச்சி, மதுரை, தஞ்சாவூர் ஆகிய மாவட்டங்களைத் தலைமையிடமாக கொண்டு பக்தர்கள் ஆன்மிகச் சுற்றுலா அழைத்துச் செல்லப்பட்டனர். இந்த ஆன்மிகப் பயணம் உற்சாக வரவேற்பை பெற்றதோடு, மிகுந்த மனநிறைவையும் தந்ததாக கலந்து கொண்ட பக்தர்கள் தெரிவித்தனர்.

அதனைத் தொடர்ந்து, இந்தாண்டு ஆடி மாதமும் சென்னை, திருச்சி, மதுரை, தஞ்சாவூர் ஆகிய மாவட்டங்களைத் தலைமையிடமாக கொண்டு சுற்றுலாத்துறையுடன் ஒருங்கிணைந்து அம்மன் திருக்கோயில்களுக்கு ஆன்மிகச் சுற்றுலா அழைத்துச் செல்ல திட்டம் வகுக்கப்பட்டுள்ளது. சென்னை மாவட்டத்தில் உள்ள பாரிமுனை காளிகாம்பாள் திருக்கோயில், இராயபுரம் அங்காளபரமேஸ்வரி திருக்கோயில், திருவொற்றியூர் வடிவுடையம்மன் திருக்கோயில் உள்ளிட்ட 9 திருக்கோயில்களுக்கு ஒரு பயணத்திட்டமும், சென்னை மயிலாப்பூர் கற்பகாம்பாள் திருக்கோயில், மயிலாப்பூர் முண்டககண்ணியம்மன் திருக்கோயில், மாங்காடு காமாட்சியம்மன் திருக்கோயில், திருவேற்காடு தேவி கருமாரியம்மன் திருக்கோயில் உள்ளிட்ட 10திருக்கோயில்களுக்கு இரண்டாவதாக ஒரு பயணத்திட்டமும் செயல்படுத்தப்படவுள்ளது.

திருச்சி மாவட்டத்தில் உள்ள உறையூர் வெக்காளியம்மன் திருக்கோயில், சமயபுரம் மாரியம்மன் திருக்கோயில், சிறுவாச்சூர் மதுர காளியம்மன் திருக்கோயில், திருவானைக்காவல் அகிலாண்டேஸ்வரி அம்மன் திருக்கோயில் உள்ளிட்ட 8 திருக்கோயில்களுக்கு ஒரு பயணத்திட்டமும்,

தஞ்சாவூர் மாவட்டத்தில் உள்ள புன்னைநல்லூர் மகா மாரியம்மன் திருக்கோயில், திருக்கருக்காவூர் கர்ப்பரட்சாம்பிகை திருக்கோயில், தஞ்சை பெரியநாயகி உடனுறை பிரகதீஸ்வரர்திருக்கோயில் உள்ளிட்ட 10திருக்கோயில்களுக்கு ஒரு பயணத்திட்டமும்,

மதுரை மாவட்டத்தில் உள்ள மீனாட்சி அம்மன் திருக்கோயில், மடப்புரம் பத்ரகாளியம்மன் திருக்கோயில், அரியாக்குறிச்சி வெட்டுடையார் காளியம்மன் திருக்கோயில் உள்ளிட 6திருக்கோயில்களுக்கு ஒரு பயணத்திட்டமும் செயல்படுத்தப்படவுள்ளது.

இந்த ஆன்மிகச் சுற்றுலா பக்தர்களுக்கு மிகக் குறைந்த கட்டணத்தில் மதிய உணவுடன் செயல்படுத்தப்பட உள்ளது. மேலும், பக்தர்களுக்கு கட்டணமில்லா சிறப்பு தரிசனம் செய்து வைக்கப்பட்டு திருக்கோயில் பிரசாதம், திருக்கோயில்கள் பற்றிய விவரங்கள் அடங்கிய கையேடு வழங்கப்படும். பக்தர்கள் ஆன்மிகச் சுற்றுலா தொடர்பாக தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழகத்தில் பதிவு செய்திட வேண்டும்.

மேலும் இது தொடர்பாக www.ttdconline.com என்ற சுற்றுலாத்துறை இணைய தளத்திலும், 044 - 25333333, 25333444 என்ற தொலைபேசி எண்களிலும், கட்டணமில்லா தொலைபேசி எண் 1800 4253 1111 என்ற எண்ணிலும் தொடர்பு கொண்டு விவரங்களை தெரிந்துக் கொள்ளலாம். ஆகவே, இறையன்பர்கள், சுற்றுலா பயணிகள் இந்த வாய்ப்பினை பயன்படுத்திக் கொள்ளலாம் என இந்து சமய அறநிலையத்துறை அமைச்சர் பி.கே.சேகர்பாபு தெரிவித்துள்ளார்.

# திராவிட இயக்க தீரர்கள் நினைவு நாள்

**சீர்காழி வை. ஞானசேகரன்**
**ஜூலை 11 (2014)**



அண்ணாமலைப் பல்கலை கழகத்தில் தமிழ்ப் பெருமன்ற செயலாளராக – மாணவர் திராவிட கழகத் தலைவராகவும் இருந்தபோது மாணவர்களை ஒருங்கிணைத்து தமிழின உணர்வு பொதுக்கூட்டம் தமிழீழ ஆதரவு பொதுக்கூட்டங்களை தொடர்ந்து நடத்தியதோடு, முதன்முதலாக தந்தை பெரியார் படத்தை திறந்து வைத்தவர்.

ஈழத் தமிழர்களுக்காக நடைபெற்ற அனைத்து போராட்டங்களிலும் கலந்து கொண்டு பலமுறை சிறை சென்றவர்.

கீழத் தஞ்சை மாவட்ட தி.க. செயலாளராக இருந்தபோது, ஈழத் தமிழர்களுக்கு மயிலாடுதுறையில் மிகப் பெரிய மாநாட்டை நடத்தியவர்.

அண்ணாமலைப் பல்கலை கழகத்தில் படிக்கும்போது மிசாவை கடுமையாக எதிர்த்து மாணவர்களிடம் துண்டறிக்கை வழங்கியவர்.

சீர்காழி ஒன்றிய பெருந்தலைவராக தேர்ந்தெடுக்கப்பட்டு, ‘கலைஞர் செம்மொழி நூலகம்’, ‘தளபதி மு.க.ஸ்டாலின் சிறுவர் விளையாட்டரங்கம்’ ஆகியவற்றை அமைத்து, அப்பகுதி மக்களின் நன்மதிப்பை பெற்றவர்

**தலைமைக் கழகம்**
**தி.மு.க.**